சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 02.04.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,
மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 6895/E/2024**

திரு.ராஜேந்திரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-5, நிலநிர்வாகத் துறை, சேப்பாக்கம், சென்னை - 600 005. பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 16.04.2025 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர் திரு.கு.ச.ராம்குமார், உதவி ஆணையர்-5, நிலநிர்வாகத் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 13.02.2026-ல் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2. மேற்படி அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதில், நிலக்கோட்டை, வட்டாட்சியர் அலுவலகம் ந.க.எண்.2496/2026/ஆ4, நாள் 30.05.2025 தேதியிட்ட குறிப்பாணையில், நிலக்கோட்டை வட்டம், நரியூத் கிராமம் பட்டா எண்.1067-ல் கட்டுப்பட்ட புல எண்.292/9, 292/11, 294/14, பட்டா எண்.705-ல் கட்டுப்பட்ட புல எண்.293/12ஏ புலங்கள் பட்டா தவறாக வேறு நபர் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றும, ஆகையால் கீழ்கண்ட புலங்களில் தவறாக உள்ள வேறுநபர்களின் பெயர்களை நீக்கம் செய்து ஆவணங்களின் அடிப்படையில தனது பெயரில் பட்டா வழங்கக் கோரி, திரு.ராஜேந்திரன், த/பெ.மரியமங்களம் என்பவர் மனு தொடர்பாக, *மனுதாரர் தாத்தா யாகப்பன் சேர்வை என்பவருக்கு மூன்று மனைவிகள் இருந்ததாகவும், அவர்கள் பாக பிரிவனை ஏதும் செய்து கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளதாகவும், மேற்படி நிலம் தொடர்பான மனுதாரின் தாத்தாவின் இறப்பு மற்றும் வாரிசு சான்று, மனுதாரரின் தந்தை மரியமங்களம் என்பவரின் இறப்பு மற்றும் வாரிசு சான்று*

*பாகபிரிவினை தொடர்பான பத்திர நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவே, மேற்படி ஆவணங்கள் சமர்ப்பிக்கும் பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ள இயலும் எனவே மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்பதற்கான* (மனுதாரர் மனு மீது எடுக்கப்பட்ட இறுதி நடவடிக்கை குறித்த) குறிப்பாணை மனுதாரருக்கு தகவலாக வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 6895/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-5,
நிலநிர்வாகத் துறை, சேப்பாக்கம், சென்னை - 600 005.

**மேல்முறையீட்டாளர்**

திரு.ராஜேந்திரன், த/பெ.மரியமங்களம்,
C/E2 Flat, சி பிளாக் இ2 பிளாட், சிங்காரம் நகர்,
மான்போர்ட் பள்ளி அருகில், பிருந்தாவன் அப்பார்ட்மென்ட் காட்டூர்,
பாப்பாக்குறிச்சி, திருவெறும்பூர், திருச்சி மாவட்டம் - 620 019.

Copy to: File MP/PA,